ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

முற்பகல் 11–45

1. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு. 2021–2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
2. திரு. அம்மன் K. அர்ச்சுணன்
3. திரு. இரா. அருள்
4. திரு. க. அன்பழகன்
5. திரு. ட்டி. இராமச்சந்திரன்
6. திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்
7. திரு. உதயநிதி ஸ்டாலின்
8. திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்
9. டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்
10. திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி

2021 ஜூன் 24] [பேரவைத் தலைவர்]

11. திரு. ஐ.பி. செந்தில்குமார்
12. திரு. ஈ. பாலசுப்ரமணியன்
13. திரு. கே. ராஜு
14. திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்
15. திரு. S. ராஜகுமார்
16. முனைவர் T.R.B. ராஜா

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2021–2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்கு பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில் மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

பேரவை விதி 196–ன்கீழ், முனைவர் T.R.B. ராஜா அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பொதுக் கணக்குக் குழு

2021–2022 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. P.R.G. அருண்குமார்
2. திரு. ம. சிந்தனை செல்வன்
3. டாக்டர் சி. சரஸ்வதி
4. திரு. எஸ். காந்திராஜன்